# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,721 — 1959 අප්‍රේල් 9 වැනි බ්‍රහස්පතින්ද — 9.4.1959

11,721 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு சித்திரை மாதம் 9 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1945 ம் ஆண்டின் 12 ம் இலக்க, கிராமக் கோட்டுக் கட்டளைச் சட்டம்

1947 ம் ஆண்டு புரட்டாதி (செப்ரெம்பர்) மாதம் 24 ந் தேதியின் 9,773 ம் இலக்க விசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்திஞல் திருத்தியமைக்கப்பட்ட, 1945 ம் ஆண்டின் 12 ம் இலக்க, கிராமக் கோட்டுக் கட்டளைச் சட்டத்தின் 52 ம் பிரிவிஞல் நீதியமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பயஞக அன்ஞரால் ஆக்கப்பட்ட பிரமாணம்.

கொழும்பு, எம். டபிள்யு. எச். டி சில்வா,
1959 ம் ஞூ மார்ச் மீ 30 நடை. நீதியமைச்சர்.

**பிரமாணம்**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டபடி, 1948 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்) மாதம் 1 ந் திகதியின் 9,909 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கிராமக்கோடுகளுக்கான சிவில் நடவடிக்கை முறைப் பிரமாணங்கள், அவற்றின் 46 ம் பிரமாணத்தில் பின்வருமாறு இதஞல் மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றன :—

(1) அப்பிரமாணத்துக்குள்ள இரண்டாவது புறவிதியின் (ஈ) என்னும் பந்தியில், " சம்பளமும் வாழ்க்கைச் செலவுப் படியும் " என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " சம்பளமும், வாழ்க்கைச் செலவுப் படியும், விசேட வாழ்க்கைப் படியும் " என்னுஞ் சொற்களை இடுவதிஞலும்,

(2) அப் புறவிதியின் (ஈ) என்னும் பந்திக்கு நேரடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடையிற் சேர்ப்பதஞலும் :—

" (உ) தீர்ப்புக் கடஞளிக் கெதிராகவுள்ள தீர்வையிற் குறிப்பிடப்பட்ட தொகை முழுவதையேனும் அல்லது அதில் ஒரு பகுதியையேனும் கொடுப்பதற்குப் பிணையாக ஈடு வைக்கப்பட்டிராததும், அத்தகைய தீர்வையை நிறைவேற்றுங்காலத்தில் அத்தீர்ப்புக் கடஞளியின் உண்மையான வசிப்பிடமாகவுள்ளதும், அத்தகைய தீர்வை எந்த வழக்கில் எழுதப்பட்டதோ அந்த வழக்குத் தொடரப்பட்ட காலத்திலிருந்து அத்தகைய வசிப்பிடமாக விருந்து வந்ததுமான எந்த வீடும் ".

---

### அறிவித்தல்

**தேசீய சம்பளக் கொள்கை அதிகார சபை.**

மேன்மை தங்கிய மகாதேசாதிபதி அவர்கள் பின்வரும் கடமைகளையுடைய அதிகார சபையொன்றை நியமித்துள்ளார் :—

" (1) (அ) தனிப்பட்டவர் துறை (Private Sector) யிலுள்ள தொழில், வியாபாரம், உற்பத்தித் தொழில், விவசாயம் ஆகியன உட்பட்ட கைத்தொழிலிலும் ;

(ஆ) வியாபாரத்திற்காகவோ மற்றும் நோக்கத்திற்காகவோ எம்முயற்சியும் நடத்த எழுத்திலுள்ள எச்சட்டத்தின் படியும் அல்லது எச்சட்டத்தின் கீழும் தாபிக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனங்களிலும்

நடைமுறையிலுள்ள வேதன, சம்பள அமைப்பை ஆராய்தற்கும் ;

(2) தேசீயப் பொருளாதார அபிவிருத்தியின் அத்தியாவசியத்தைக் கருத்திற்கொண்டு, ஊழியரும் முதலாளிகளும் பொருத்தமானதும், நியாயமானதுமான வருவாயையடைய உதவும் தேசீய சம்பளக் கொள்கையொன்றை.—

(அ) தனிப்பட்டவர் துறையிலுள்ள தொழில் வியாபாரம், உற்பத்தித்தொழில், விவசாயம் ஆகியன உட்பட்ட கைத்தொழிலிலும் ;

(ஆ) வியாபாரத்திற்காகவோ மற்றும் நோக்கத்திற்காகவோ எம்முயற்சியையும் நடத்த எழுத்திலுள்ள எச்சட்டத்தின் படியும் அல்லது எச்சட்டத்தின் கீழும் தாபிக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனங்களிலுள்ள ஊழியர் விடயத்தில்

சிபார்சு செய்தற்கும் ;

(3) விடுப்பு (லீவு), வாழ்க்கைப்படி, வாடகைப்படி ஆகிய இனத்தைச் சேர்ந்த விடயங்களிலும் வேலை நிபந்தனைகள் பற்றிய மற்றும் எவ்விடயங்களிலும் மாற்றங்கள் தேவையெனக் கருதின், தேசீயப் பொருளாதார அபிவிருத்தி விடயத்தில் முதலாளிகளுக்கும் ஊழியருக்குமிடையே மிகவும் பூரணமான ஒத்துழைப்பை விருத்தி செய்யக்கூடிய வகையில் நிலைமையை ஏற்படுத்தும் பொருட்டு சிபார்சுகளைச் செய்தற்கும். "

2. இவ் அதிகார சபை முதலாவதாக, அதன் விசாரணை எல்லைகளுக்குட்பட்ட தொழிற் துறைகளில் நடைமுறையிலுள்ள வேதன, சம்பள அமைப்பு பற்றித் தெளிவான கருத்தைத் தெரிந்து கொள்ளவிரும்புகிறது. இயன்றவரை நிறைவான கருத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, விசாரணை எல்லைகளுக்குட்பட்ட பல்வேறு தொழிற் துறைகளில் நடைமுறையிலுள்ள வேதன, சம்பள அமைப்பை விளக்கமாகவும் நுணுக்கமாகவும் ஆராயும் விண்ணப்பங்களை அனுப்புமாறு ஊழியரின் தொழிற் சங்கங்களையும் முதலாளிகளின் தொழிற் சங்கங்களையும், வர்த்தகச் சங்கங்கள், கூட்டுத்தாபனங்கள், மற்றும் தாபனங்கள் ஆகியவற்றையும், பொது சனங்களையும் இவ் அதிகார சபை கேட்டுக்கொள்கிறது.

3. விண்ணப்பங்கள் யாவும், இரட்டைப் பிரதிகளாகக் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் தட்டெழுத்திற் தயாரிக்கப்பட்டு, 1959 ம் ஆண்டு மே மாதம் 18 ம் தேதியன்று அல்லது அதற்கு முன்பாக பின்வரும் விலாசத்தாரிடம் கிடைக்கும் வண்ணம் அனுப்பப்படவேண்டும் :— தேசீய சம்பளக் கொள்கை அதிகாரசபைக் காரியதரிசி, தபாற் பெட்டி இல . 392, கொழும்பு.

அதிகார சபையின் உத்தரவுப்படி

டபிள்யூ. எம். திலகரத்ன,
தேசீய சம்பளக் கொள்கை அதிகார சபைக் காரியதரிசி.

தபாற் பெட்டி இல . 392,
கொழும்பு,
1959 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 4 ம் தேதி.

---

**4 B ம் மாதிரிப்பத்திரம்**

### 1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம் சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாருக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்ரர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

கொழும்பு, வி. யோ. அ. குணசேகரா,
1959 ம் ஞூ சித்திரை மீ 6 ந் உ. இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|---|
| O 1069—15.10.50 | .. | முருகன் சின்னையா, அல்கிறனேயாத் தோட்டம், அல்கிறனேயா | செல்லாயி அல்லது செல்லம்மா (மனைவி) |
| O 1200—8.10.50 | .. | முருகன் சுப்பையா, நடுப் பிரிவு, டெல்மார்த் தோட்டம், அல்கிறனேயா | பொட்டு (மனைவி), இலெச்சுமி (மகள்), தெய்கராசா (மகன்) |
| O 1336—8.10.50 | .. | இராமையா கைம்பெண் வேலாயுதம் சிலம்பாயி, நடுப்பிரிவு, டெல்மார்த் தோட்டம், அல்கிறனேயா | கதிரவேல் அல்லது தங்கசாமி (மகன்), பெருமாள் அல்லது சண்முகநாதன் (மகன்) |
| O 1532—18.2.51 | .. | கறுப்பண்ணன் பெரியண்ணன், மேற் பிரிவு, இருகலைக் கூட்டம், அல்கிறனேயா | கறுப்பாயி (மனைவி), பொன்னம்பலம் (மகன்), மாரியாயி (மகள்), வீரமலை அல்லது நடராசா (மகன்) |
| O 1750—28.1.51 | .. | சின்னத்தம்பி இராமசாமி, பினையர்லோமன்ட் தோட்டம், உடப்புசல்லாவை | காமாட்சி (மனைவி), கமலம் (மகள்), சிவசுப்பிரமணியம் (மகன்), சொக்கலிங்கம் (மகன்), வடிவேல் (மகன்), பஞ்சவர்ணம் (மகள்) |
| O 1770—28.1.51 | .. | கந்தையா முத்துச்சாமி, பினையர்லோமன்ட் தோட்டம், உடப்புசல்லாவை | பூவாயி (மனைவி), களப்பாயி (மகள்), வெங்கடாசலம் அல்லது சாமிமாலா (மகன்) |
| O 1804—28.1.51 | .. | வெங்கிடாசலம் பெருமாள், பினையர்லோமன்ட் தோட்டம், உடப்புசல்லாவை | மாரியாயி (மனைவி), ஜெயலெட்சுமி அல்லது வள்ளியம்மா (மகள்), செல்வம் (மகள்), சுந்தராம்பாள் (மகள்) |
| O 2334—5.3.51 | .. | பழனியாண்டி இரெங்கசாமி, கோர்டன் தோட்டம், உடப்புசல்லாவை | மாரியாயி (மனைவி), இரெங்கம்மாள் (மகள்) |
| O 2382—5.3.51 | .. | வேலன் இரெங்கன், கோர்டன் தோட்டம், உடப்புசல்லாவை | அஞ்சலை (மனைவி), சிவனுயி (மகள்), வேலாயி (மகள்), இலெட்சுமாயி (மகள்), தங்கவேல் (மகன்), செல்லாயி (மகள்) |
| O 2402—5.3.51 | .. | சுப்பையா வேலாயுதம், கோர்டன் தோட்டம், உடப்புசல்லாவை | பொட்டு (மனைவி), தெய்வானை (மகள்), ஜெயலெட்சுமி(மகள்) |
| O 2505—11.3.51 | .. | தேருவன் இராக்கன், இறப்பகநொக் தோட்டம், உடப்புசல்லாவை | கறுப்பையா அல்லது கறுப்பன் (மகன்) |
| O 4011—3.7.51 | .. | சின்னச்சாமி நடேசன், டீகலக்கின்னைக் கடைவீதி, டீகலக்கின்னை | பறுவதம் (மனைவி), தவமணி (மகள்), நாகேசுவரி (மகள்), சரசுவதி (மகள்), சோதிமணி (மகள்), இந்திராணி (மகள்), அன்னவடிவு (மகள்), வனஜா (மகள்) |
| O 4111—30.5.51 | .. | வெள்ளையன் கோட்டன், மூலோயாத் தோட்டம், எவகெற்றை | காளியம்மா (மனைவி), சின்னப்பிள்ளை அல்லது தெய்வானை (மகள்), பொடிசாக்காந்தி அல்லது காந்தி (மகன்) |
| O 4730—17.7.51 | .. | சேவுகம் பெரியண்ணன் முத்தையா, மகாக்கூடக்கலைத் தோட்டம், அல்கிறனேயா | நல்லம்மா (மனைவி), சொக்கலிங்கம் (மகன்), இராசாம்பாள் (மகள்), இராமச்சந்திரன் (மகன்); தவமணி (மகள்) |
| O 4746—19.7.51 | .. | சின்னப்பஞ்சன் சின்னையா, பினையர்லோமன்ட் தோட்டம், உடப்புசல்லாவை | இராமநாதன் (மகன்) |
| O 5151—24.6.51 | .. | சீனி பனையன் அடைக்கலம், அலக்கொலமடப்பத்தனை, உடப்புசல்லாவை | பொளிங்கியம்மாள் (மனைவி), சிகாமணி (மகள்); தியாகராசா (மகன்), திருப்பதி (மகன்), திருவாசகம் (மகன்) |
| O 5600—10.7.51 | .. | குமரன் ஆறுமுகம், யோன்ஸ்லன்ட் தோட்டம், எவகெற்றை | காளியம்மாள் (மனைவி), மாரியாயி (மகள்), வீரமாகாளி அல்லது அன்னம்மா (மகள்), மனோமணி (மகள்), பழனிவேலு (மகன்); மணியம்மா (மகள்) |
| O 5851—17.6.51 | .. | சுப்பன் சந்தணம், அல்லக்கொல்லைப் பிரிவு, கோணப்பிட்டிக் கூட்டம், கந்தப்பளை | தனபாக்கியம் (மனைவி), சதாசிவம், (மகன்), வள்ளியம்மா (மகள்), ஜெயலெட்சுமியம்மா (மகள்) |
| O 5853—17.6.71 | .. | முத்துச்சாமி இராமசாமி, அல்லக்கொல்லைப் பிரிவு, கோணப்பிட்டிக் கூட்டம், கந்தப்பளை | குள்ளம்மாள் (மனைவி), இரெங்கம்மா (மகள்), பழனியம்மா (மகள்), கிருஷ்ணசாமி (மகன்), நாராயணசாமி (மகன்), ஆறுமுகம் (மகன்), ஐயம்மா (மகள்), கணேசன் (மகன்), ஜெயலெட்சுமி (மகள்) |
| O 5854—17.6.51 | .. | முத்துச்சாமி முத்து, அல்லக்கொல்லைப் பிரிவு, கோணப்பிட்டிக் கூட்டம், கந்தப்பளை | பழனியாயி (மனைவி), பெருமாள் (மகன்), துரைச்சாமி (மகன்), சுப்பிரமணியம் அல்லது முருகையா (மகன்), இராசமாணிக்கம் (மகன்), அன்னலெட்சுமி (மகள்), தெய்வானையம்மா (மகள்), உருக்குமணி (மகள்), இராசம்மா (மகள்) |
| O 6071—10.7.51 | .. | சடையன் இராமையா, மேற் பிரிவு, ஓப் தோட்டம், எவகெற்றை | பாக்கியம் (மனைவி), கிருஷ்ணவேணி (மகள்), குணதேவன் (மகன்), சரசுவதி (மகள்) |
| O 6082—10.7.51 | .. | கதிரவேல் சுப்பையா, நடுப்பிரிவு, ஓப் தோட்டம், எவகெற்றை | பூவாயி (மனைவி), காமாட்சி (மகள்), வள்ளியம்மா (மகள்) |
| O 6084—10.7.51 | .. | மூக்கன் சாம்பன், நடுப் பிரிவு, ஓப் தோட்டம், எவகெற்றை | சிவனுயி (மனைவி), மகாராணி (மகள்) |
| O 6134—20.7.51 | .. | முருகன் கோவிந்தன், மேற் பிரிவு, ஓப் தோட்டம், எவகெற்றை | கதிராயி (மனைவி) |
| O 6352—24.6.51 | .. | அடைக்கன் சின்னச்சாமி, தியனில்லைப் பிரிவு, லித்தெஸ்டேல் தோட்டம், அல்கிறனேயா | வெள்ளையம்மா (மனைவி) |
| O 6598—17.6.51 | .. | நாயகம் அருளந்து; கோணப்பிட்டிக் கூட்டம்; கந்தப்பளை .. | மரியம்மாள் (மனைவி), சந்தணம் (மகன்) |
| O 6662—17.6.51 | .. | மாணிக்கம் சண்முகம், கோணப்பிட்டிக் கூட்டம், கந்தப்பளை | நாகம்மாள் அல்லது மீனுட்சி (மகள்) |
| O 6721—17.6.51 | .. | பழனியாண்டி மாணிக்கம், கோணப்பிட்டித் தோட்டம், கந்தப்பளை | தெய்வானை (மனைவி), பழனியாண்டி (மகன்), இரத்தினசவுந்தரி (மகள்), பாக்கியலீலா (மகள்), எமானுவேல் யோன் (மகன்); மகேசுவரி (மகள்) |
| O 6724—17.6.51 | .. | கைலாசம் சிவானு கைம்பெண் பாலாயி, கோணப்பிட்டிக் கூட்டம், கந்தப்பளை | செல்வமணி அல்லது பெரியக்காள் (மகள்), பழனியாண்டி (மகன்), உலோகமணி அல்லது பெரமாயி (மகன்) |
| O 6903—27.12.50 | .. | கதிரவேல் இரெங்கசாமி, லித்தெஸ்டேல் தோட்டம், அல்கிறனேயா | சீரங்காயி (மனைவி), கோவிந்தம்மாள் (மகள்), இராசு அல்லது இராசம்மாள் அல்லது சின்னப்பிள்ளை (மகன்), சின்னையா (மகன்) |

## நானாவித அறிவித்தல்கள்

### விசர் நாய்க்கெடுதி

விசர் நாய்களைப் பற்றிய சட்டத்தின் 11 ம் பிரிவு, 333 ம் அதிகாரத்தின் பிரகாரம் வதுளை, பண்டாரவெல, அப்புத்தளை நகர சபைகளின், வெலிமடை, பஸ்ஸரை பட்டின சபைகளின் எல்லைகளுக்குள் தவிர வதுளை வருமான டிஸ்திறிக்கில் ஏனைய இடங்களில் விசர் நாய்க்கெடுதி இருக்கிறதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

மேற் சொல்லப்பட்ட பகுதியிலுள்ள எந்தப் பிரசித்த இடத்திலாவது, அல்லது வீதியிலாவது, அல்லது ஊரவர்க்குரிய கட்டிடம், வளவு, தோட்டம் அல்லாத வேறெந்த இடத்திலாவது, கட்டப்பட்டிராமலும் அல்லது ஒருவரால் நடத்திக்கொண்டு போகப்படாமலுங் காணப்படும் எந்த நாயையும் உடனே கொல்லப்பட ஏதுவாகும்.

இந்த விளம்பரம் 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 30 ந் திகதி தொடக்கம் ஆறு மாதகாலம் வரைக்கும் அமுலில் நிற்கும்.

பீ. பி. வீ. ஏ. ஜே. பி. சேனாரட்ன,
வதுளை அரசாங்க மாவட்ட அதிபதி.

வதுளைக் கச்சேரி,
1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 30 ம் திகதி.

## விளம்பரம்

1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக விருப்பதனை முன்னிட்டு, 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 17 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1959 ம் ஆண்டு சித்திரை (ஏப்றில்) மாதம் 13 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1959 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மீ 26 ந் உ.

பேர்னார்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.